[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 12

உள்ளவர்களுக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதிலும் வேலைவாய்ப்பு கொடுப்பது என்பது மத்திய அரசின் கையில் இருக்கிறது. நான் இந்த மன்றத்தில் ஏற்கனவே எடுத்துக்காட்டியது போல், மற்ற மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளில், பிற மாநிலங்களில் பின்பற்றி வரும் கொள்கைப்படி, நம்முடைய அரசின் அலுவலர் ஒருவரை அவர்கள் ஏற்றுக்கொண்டு, வேலைவாய்ப்புப் பணிகளைத் தமிழ் நாட்டைச் சேர்ந்த மக்களுக்கு, அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி வருகிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, அமைச்சர் பதிலில் இருந்து சில 'கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிகள்' தான் ஆட்களை வைத்து இருப்பதாகத் தெரிகிறது. அந்தத் தொழிற்சாலையில் நேரடியாக வேலைக்கு இருக்கும் ஆட்களைப் பற்றிய தகவல் இல்லை. ஆகவே, அந்தத் தொழிற்சாலையில் நேரடியாக எவ்வளவு பேர்களை வேலைக்கு வைத்து இருக்கிறார்கள், இந்தக் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிகள் எவ்வளவு பேர்களை வேலைக்கு வைத்து இருக்கிறார்கள், அமைச்சர் சொல்லும் கணக்கு எல்லாவற்றிற்கும் சேர்த்தா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே, 100 என்று சொன்னேன்.

கிராமப் பகுதிகளில் மருத்துவத் தொழில் நடத்த கடன்கள்

*13 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்தக் கடன் உதவி அளிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

1974 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) கிராமப் பகுதிகளில் மருத்துவத் தொழில் நடத்த தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் டாக்டர்களுக்குக் கடன் வழங்குகிறது. கடனுதவிக்குக் குறைந்த பட்ச அளவு ரூ. 10,000, உயர்ந்த பட்ச அளவு ரூ. 1,00,000 ஆண்டு ஒன்றுக்கு 7½ சதவிதம் வட்டிக்கு மதிப்பிடப்பட்டுள்ள தொகையில் 90 சதவிதம் வழங்கப் படுகிறது. இக்கடன் எட்டு ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். முதல் இரண்டு ஆண்டுகளுக்குக் கடன் தவணைத் தொகைச் செலுத்தப்பட வேண்டியதில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தக் கடன் வழங்கும் திட்டத்தின் மூலம் நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் அத்தகைய கடன்களைப் பெற்று ஹாஸ்பிடல் கட்டுகிறார்கள். இப்படிப்பட்ட வசதியைக் கொண்டு கிராமப்புறங்களில் ஹாஸ்பிடல் கட்டுவதற்கு அரசாங்கம் விதியைத் தளர்த்தி ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கடன் திட்டமே கிராமங்களுக்குத்தான். நகரங்களுக்கு இல்லவே இல்லை. முனிசிபல் எல்லையில் கூட கூடாது என்று முடிவு கட்டியிருக்கிறோம். கிராமப்புறங்களில் கட்டுவதற்குத்தான் கடன் கொடுக்கப் படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, மாண்புமிகு. . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, the previous question is impotant and we have been raising our hands.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று 30 கேள்விகள் இருக்கின்றன. அதிலே .....

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Question Hosur should be informative. The Chair can allow one more supplementary and then pass on to the next question.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 14 கேள்விகள் தான் ஆகியிருக்கின்றன. இன்னும் 16 கேள்விகள் இருக்கின்றன. வினா எண் 14, திரு. பி. வெங்கடசாமி